முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1293

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.04.2023, வெள்ளிக்கிழமை

1. சக்திமிகு அரங்கனே வாழ்கவாழ்க
   சங்கடங்கள் போக்கிடும் தேசிகா வாழ்க
   பக்திகொண்டு உன் வழி உலகோர் நிற்க
   பரோபகாரமாய் பிறவா பேறு அருளுகின்ற குருஅரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் முதல் நாள், 14.04.2023 வெள்ளிக்கிழமை)
   ஊழ் போக்கும் கலியின் மாதவசி நீ
   உண்மைபொருள் உணர்த்தும் மகா யோகி நீ
3. வாழ்வளிக்கும் மகா தவசி நீ
   வையகத்தையே மீட்கும் மகா யோகி நீ
   யோகியே ஆறுமுக அரங்கனே
   உலகத்தில் உன் தொண்டர்படை பெருக
4. அகிலமே சர்வ பாதுகாப்பும் காணும்
   ஆளுமையும் தர்மஞான வழிகளாக மாறும்
   மாறுதலை கலியில் செய்வதற்கே
   மாதர்மத்தை கையில் கொண்ட அரங்கனே
5. ஆறுதலாய் ஆறுமுகன் யான் உன்னுள் இருக்க
   அனைத்தும் வரமாக உலகோர்க்கு தர்மமாகச் சென்று
   சென்றுமே ஆங்காங்கே அரங்கன் உன் சக்தி நிலைத்து நின்று
   ஜெகமெல்லாம் சன்மார்க்க சங்கத்தின் செயல்பாடுகள்
6. செயல்பாடுகள் அளவில்லா ஆற்றலாக மாறி
   சித்திகளும் கைவரப்பெற்று இனிதே
   தயவான மாந்தர்கள் உலகை ஆளும் வண்ணம்
   தக்கபடி மாற்றங்கள் சடுதி இனிதே நடந்தேறும்

7. நடந்தேற அரங்கனுக்கு இந்த தமிழ் புத்தாண்டில்
ஞானபண்டிதன் இன்னும் சக்தியூட்டி
இடர்களையெல்லாம் கடந்து அரங்கன் இனிதே
எழுந்தமர்ந்து உலகோரை நோக்கி

8. நோக்கியே உலகமெல்லாம் வலம்வந்து
நிலவுலகை ஞானவழி நடத்த ஆறுமுகன் என்
பலமான வரமும் ஆசியும்
பாதுகாப்பான அனுகூலமும் உண்டுஉண்டு

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—